# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## NEWS EXTRACTS FROM PRESS MEDIA

THE HINDU
30-4-2022

TIRUCHIRAPALLI

# St. Joseph's College launches Learning Management System developed in-house

SPECIAL CORRESPONDENT

TIRUCHI APRIL 29, 2022 19:10 IST
UPDATED: APRIL 29, 2022 19:10 IST

SHARE ARTICLE PRINT A A A

St. Joseph's College, Tiruchi, has launched JosTEL, (Joseph's Technology Enhanced Learning), a learning management system developed in-house, conceptualising it as a 'pioneering initiative' for arts and science colleges.

A total of 500 E-content in various forms such as videos, text materials, presentations and 150 assessments in the form of multiple-choice-questions and assignments have been uploaded into the portal.

Principal M. Arockiasamy Xavier launched JosTEL along with Rev. Fr. S. Leonard, the rector; and Rev. Fr. S. Peter, Secretary, on Thursday.

Internal Quality Assurance Cell of the College had chosen a PG course from each Department, and equipped the faculty with the expertise to develop the E-content and Assessment, Rose Venis, Dean for IQAC and Qurshid Begum, Additional Dean, said.

All the PG students in the college have been enrolled into the LMS portal after imparting technical training for fullest use of the LMS portal to learn the courses and take up assessments on their own. The course teachers for the corresponding course will help the students online in the portal to clarify them with their queries. The college is also planning to launch self-courses to all the UG students in the next academic year. This is to enhance the students to experience asynchronous mode of digital learning, V. Alex Ramani, Deputy Principal, said. Of the 30 courses launched in the portal, 20 and Self-Paced, and the rest value-added ones.

S. Senthil Nathan, Director, Human Resource Development Centre, Bharathidasan University, delivered a special address on 'LMS for Techno-Pedagogical Innovations' on the occasion. "LMS is a felt need in the current scenario of higher education delivery to facilitate students for 'anytime anywhere' learning, Prof. Senthilnathan said.

JosTEL
JOSEPH'S TECHNOLOGY ENHANCED LEARNING

**LAUNCH OF JosTEL LMS - 28.4.2022**

**NEWS EXTRACTS FROM PRESS MEDIA**

THE NEW INDIAN EXPRESS

**30-4-2022**

# Tiruchy college brings out in-house LMS

**EXPRESS NEWS SERVICE** @ Tiruchy

ST. JOSEPH'S College, Tiruchy, launched Joseph's Technology Enhanced Learning (JosTEL), an in-house developed learning management system on Thursday. Rev Dr M Arockiasamy Xavier SJ, principal, dedicated the it to students at St. Joseph's College in the presence of Rev Dr S Leonard SJ, rector, Rev Dr S Peter SJ, secretary, and Dr V Alex Ramani, deputy principal.

St. Joseph's College is the first to launch an exclusive in-house developed LMS among arts and science colleges in Tamil Nadu, teachers said. Internal Quality Assurance Cell of the college has chosen a PG course from each department, and has trained faculty experts in the course to develop the e-content and assessment. The total number of courses launched in the portal are 30 out of which 20 self-paced courses and 10 value-added courses.

> **St. Joseph's College is the first to launch exclusive in-house developed learning management system among arts and science colleges in Tamil Nadu**
>
> Teachers

Totally, 500 e-content in various forms such as videos, text materials, presentations and 150 assessments in the form of MCQs and assignments were uploaded on the portal. All PG students in the college are enrolled into the LMS portal. The students are also technically trained to make the fullest use of the portal.

Dr Senthil Nathan, director, Human Resource Development Centre, Bharathidasan University, Tiruchy, delivered a special address on "LMS for techno-pedagogical innovations".

He emphasised the need for LMS in the recent scenario education to facilitate the students learning any time anywhere. Dr Rose Venis, Dean for IQAC, and Dr Qurshid Begum, additional dean, IQAC, led the team of technical experts — Dr V Jude Nirmal, Dr Xavier Pradeep Singh, Dr A Vimal Jerald and Dr George Richard Gabriel Roy — who designed and developed JosTEL and also have trained the faculty members to design the e-content for their courses.

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## NEWS EXTRACTS FROM PRESS MEDIA



Printed from
THE TIMES OF INDIA **30-4-2022**

# St Joseph's college launches e-learning portal

TNN | Apr 30, 2022, 03.34 AM IST

Trichy: To enhance learning and self-assessments by students, St Joseph's College has launched JosTEL, (Joseph's Technology Enhanced Learning), an in-house learning management system (LMS) portal. Principal Rev Dr M Arockiasamy Xavier said LMS is the first of its kind to be developed in-house among arts and science colleges in Tamil Nadu. The internal quality assurance cell of the college has chosen a PG course from each department and trained faculty experts in the course to develop the e-content and assessment. "The students were technically trained to make the fullest use of the portal. The course teachers for the corresponding course will help the students online in the portal to clarify their queries," he added. The total number of courses launched in the portal is 30, of which 20 are self-paced and 10 value added. In all, 500 e-content in the form of videos, text materials, presentations and 150 assessments in the form of MCQs and assignments were uploaded to the portal.

All PG students at the college are enrolled in the portal to enable them to avail of their respective courses, the principal said.

"The college is planning to launch self-courses for all UG students in the next academic year to enhance students' experience in asynchronous mode of digital learning," he said.

Dr Senthil Nathan, director, HRD Centre, Bharathidasan University, college rector Rev Dr S Leonard, secretary Rev Dr S Peter, and deputy principal Dr V Alex Ramani participated. Rose Venis, dean for IQAC and Qurshid Begum, additional dean led the team of technical experts, V Jude Nirmal, Xavier Pradeep Singh, A Vimal Jerald, Goerge Richard Gaberial Roy, who designed and developed the JosTEL portal.

தினமணி **29-4-2022**

# கல்லூரி மாணவர்களுக்கான கற்றல் மேலாண்மைத் தளம்

## தூய வளனார் கல்லூரி அறிமுகம்

**திருச்சி, ஏப். 29:** தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலேயே முதன்முறையாக மாணவர்களுக்கான கற்றல் மேலாண்மை தளத்தை தூய வளனார் கல்லூரி தொடங்கியுள்ளது.

இந்த தளத்தின் மூலம் அனைத்து முதுகலை மாணவர்களும் தங்களது பாடங்களில் இருந்து ஏதேனும் ஒரு பாடத்தை இணைய வழியாக தாங்களாகவே கற்றுக் கொள்ளும் நிலை உருவாக்கித் தரப்பட்டுள்ளது.

இக் கல்லூரியின் உள் தர மதிப்பீட்டுக் குழு முயற்சியில் ஜோஸ்டெல் என்ற பெயரில் இந்த கற்றல் மேலாண்மை தளத்தை கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் உருவாக்கியுள்ளனர்.

ஒவ்வொரு துறையிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புத் திறனை வளர்த்திடும் வகையில் ஒரு பாடத்தை தேர்வு செய்ய அனுமதிக்கப்படுகிறது. அப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர்கள், பாடங்களுக்கான காணொலிகள், தரவுகளை உருவாக்கி இந்தத் தளத்தில் உள்ளீடு செய்யப்படுகிறது.

மேலும், மாணவர்களின் கற்றல் திறனை உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு பாடத்துக்குப் பிறகும் இணைய வழித் தேர்வுகளும் நடத்தப்படும்.

இதன் தொடக்கமாக முதுகலையில் 20 பாடங்களுக்கும், 10 மதிப்புக் கூட்டு பாடங்களுக்கும் பேராசிரியர்களின் காணொலிகள், தரவுகள், தேர்வுகளுக்கு தயார்படுத்தும் பயிற்சி வகுப்புகள் உள்ளிட்ட 500-க்கும் மேற்பட்ட உள்ளீடுகள் பதிவேற்றப்பட்டுள்ளன. இவற்றை எப்படி பயன்படுத்துவது என்பது குறித்துமாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில், இந்த சிறப்புத் தளத்தை மாணவர்கள் பயன்பாட்டுக்கு கல்லூரி முதல்வர் ஆரோக்கியசாமி சேவியர் தொடங்கி வைத்தார். நிகழ்வில், உயர்கல்வியில் கற்றல் மேலாண்மை தளத்தின் பங்கு குறித்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு பயிற்சி மைய இயக்குநர் செந்தில் நாதன் சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில், கல்லூரி அதிபர் லியோனார்டு பெர்னாண்டோ, செயலர் பீட்டர், அக தர மதிப்பீட்டுக் குழுத் தலைவர் ரோஸ் வெனிஸ், இணைத் தலைவர் குர்சித் பேகம், பேராசிரியர்கள் ஜூடு நிர்மால், சேவியர் பிரதீப் சிங், விமல் ஜெரால்டு, கேப்ரியல் ரிச்சர்டு ராய் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

1-5-2022

தினத்தந்தி

## திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில்

# கற்றல் மேலாண்மை தளம் தொடக்கம்

திருச்சி, மே.1-

தரமதிப்பீட்டுக் குழு முயற்சியினால் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முதன்முறையாக, அனைத்து முதுகலை மாணவர்களும் தங்கள் பாடத்தின் ஒரு பகுதியை முற்றிலும் இணையவழியில் தாங்களாகவே கற்பதற்கு ஏதுவாக 'ஜோஸ்டெல்' என்கிற கற்றல் மேலாண்மை தளம் தொடங்கப்பட்டுள்ளது. இதனை கல்லூரி முதல்வர் ஆரோக்கியசாமி சேவியர் தொடங்கி வைத்தார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மனித வள மேம்பாட்டுப் பயிற்சி மையத்தினுடைய இயக்குனர் செந்தில்நாதன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். அவர் பேசுகையில், செயின்ட் ஜோசப் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களின் முயற்சியால் இந்த ஜோஸ்டெல் என்ற கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையிலும் மாணவர்களும் வேலை வாய்ப்புத்திறனை வளர்ப்பதற்கு உதவும் வகையில் பேராசிரியர்கள் அந்தந்த பாடங்களுக்கான காணொலிகள் மற்றும் தரவுகளை உருவாக்கி இந்த கற்றல் மேலாண்மை தளத்தில் உள்ளீடு செய்துள்ளார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரியின் நிர்வாகிகள் லியோனார்டு பெர்னான்டோ, செயலாளர் பீட்டர், துணை முதல்வர்கள், புலத்தலைவர்கள், துறைத்தலைவர்கள், அனைத்துத்துறையின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கல்லூரியின் அகதரமதிப்பீட்டுக் குழு தலைவர் ரோஸ் வெனிஸ் மற்றும் இணை தலைவர் குர்சித் பேகம் ஆகியோர் செய்திருந்தனர்.

THE TIMES OF INDIA
சமயம் Tamil ONLINE 29-4-2022

*Tamil News / Latest News / Tiruchirappalli / Value Added Online Course Started At Trichy St Joseph College*

# திருச்சி கல்லூரியில் புதிய பாடத்திட்டங்கள் - மாணவர் கல்வி மேம்பட புது யுக்தி

*Curated by* Mohammed Ghowse | Samayam Tamil *Updated: 29 Apr 2022, 1:06 pm*

Subscribe YouTube 220K

செயிண்ட் ஜோசப் கல்லூரியில் சோஸ்டல் மதிப்புக்கூட்டு இணையவழி மேலாண்மை பாடத்திட்டங்கள் துவங்கியது.



**ஹைலைட்ஸ்:**

- திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் மதிப்பீட்டு குழு முயற்சியில் இணையவழி மேலாண்மை திட்டம் துவக்கம்
- முதுகலை மாணவர்கள் இணையவழியில் தாங்களாகவே கற்பதற்கான கற்றல் மேலாண்மை தளம்
- கல்லூரியின் பேராசிரியர்கள் இணைந்து உருவாக்கிய புதிய கற்றல் மேலாண்மை தளம்

திருச்சி மாவட்டம் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி அமைந்துள்ளது. இந்த கல்லூரியின் முதல்வர் முனைவர் ஆரோக்கியசாமி சேவியர் ஆவார். இந்த கல்லூரியில் மதிப்பீட்டுக் குழு முயற்சியில் தமிழகத்தில் உள்ள கலை அறிவியல் கல்லூரிகளில் முதன்முறையாக முதுகலை மாணவர்களுக்கான இணைய வழியில் தாங்களாகவே கற்பதற்கு ஏதுவாக ஜோஸ் டெல், ஜோஸப் டெக்னாலஜி என்ஹான்ஸ் லேர்னிங் *(Joseph Technology Enhanced Learning)* என்ற இந்திய கற்றல் மேலாண்மை தளத்தை கல்லூரியில் உள்ள பேராசிரியர்கள் ஜீடு நிர்மல், சேவியர் பிரதாப்சிங், ஜெரால்டு மற்றும் கேப்ரியல்ரிட்சர்ட் ராய் ஆகியோர் இணைந்து உருவாக்கியுள்ளனர்.

இந்த தளத்தை மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்லூரி முதல்வர் முனைவர் ஆரோக்கியசாமி சேவியர் இன்று செயல்பாட்டுக்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு பயிற்சி மையத்தின் இயக்குனர் முனைவர் செந்தில்நாதன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்த படிவத்தை பூர்த்தி செய்து கவர்ச்சிகரமான பரிசை வெல்லும் வாய்ப்பைப் பெறுங்கள்

முன்னதாக செய்திகளுக்கு பேட்டி அளித்த கல்லூரி முதல்வர் இதுகுறித்து கூறுகையில், கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் முயற்சியால் இந்த ஜோஸ்டெல் என்கிற கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறையில் மாணவர்களும் வேலைவாய்ப்பு திறனை வளர்ப்பதற்கு உதவும் வகையில் பாடத் திட்டங்களை தேர்வு செய்து அந்தப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர்கள் பாடங்களுக்கான காணொளிகள் மற்றும் தகவல்கள் உருவாக்கி இந்த கற்றல் மேலாண்மைதளத்தில் உள்ளீடு செய்து உள்ளனர்.

மாணவர்கள் கற்றலை உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு பாடத்திற்கும் இணைய வழி நடத்தப்படும். இந்தக் கற்றல் மேலாண்மை தளத்தில் முதல் கட்டமாக கல்லூரியின் அனைத்து முதுகலை மாணவர்கள் இணைந்து கற்கும் விதத்தில் மொத்தம் *20* சுய கற்றல் பாடங்களும் மற்றும் மதிப்பு கூட்டு பாடங்களும் தயாரிக்கப்பட்டு தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மேலும் கல்வித்துறையில் உலகளாவிய பல தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களும் உலக தரத்திற்கு படங்களை தங்குதடையின்றி விரும்பும் நேரத்தில் இருக்கும் இடத்தில் இருந்து கற்றலை தொடர இந்த மேலாண்மை தளம் உதவுகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் கல்லூரி அதிபர் முனைவர் லியோனார்ட் பெர்னாட்ஷா, செயலாளர் முனைவர் பீட்டர்,
அக தர மதிப்பீட்டு குழு தலைவர் முனைவர் ரோஸ் வெனிஸ், இடைத் தலைவர் குர்ஷித் பேகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**To read online scan the QR code**

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## NEWS EXTRACTS FROM PRESS MEDIA

தமிழ் முழக்கம்
உண்மையை பறைச்சாற்றுவோம்

**ONLINE**

**30-4-2022**

திருச்சி

# திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் "ஜோஸ் டெல்" என்கின்ற கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கம்.

By JB

APR 29, 2022




திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் உள் தர மதிப்பீட்டுக் குழு முயற்சியில் தமிழகத்திலுள்ள கலை அறிவியல் கல்லூரிகளில் முதன்முறையாக அக்கல்லூரியின் அனைத்து முதுகலை மாணாக்கர்களும் தங்கள் பாடத்தினை இணையவழியில் தாங்களாகவே கற்பதற்கு ஏதுவாக ஜோஸ் டெல் என்கிற கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஜோஸ் டெல் கற்றல் மேலாண்மை தளத்தினை மாணவர்களின் பயன்பாட்டிற்கு இன்று கல்லூரியின் முதல்வர் ஆரோக்கியசாமி சேவியர் துவங்கி வைத்து செயல்பாட்டிற்கு கொண்டு வந்தார். மேலும் உயர்கல்வியில் கற்றல் மேலாண்மை தளத்தின் பங்கு குறித்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு பயிற்சி மையத்தின் இயக்குனர் செந்தில்நாதன் சிறப்புரையாற்றினார்.



இந்நிகழ்வில் கல்லூரியின் நிர்வாகிகள் அதிபர் லியோனார்ட் பெர்னான்டோ, செயலர் பீட்டர், துணை முதல்வர்கள் புலத்தலைவர்கள், துறை தலைவர்கள் , அனைத்து துறையின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர். இன் நிகழ்விற்கான ஏற்பாட்டினை கல்லூரியின் அக தர மதிப்பீட்டுக் குழு தலைவர் ரோஸ் வெனிஸ் மற்றும் இணை தலைவர் குர்ஷித் பேகம் ஆகியோர் செய்திருந்தனர்.

**To read online scan the QR code**

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## NEWS EXTRACTS FROM PRESS MEDIA

**தமிழக நியூஸ்** நடுநிலை நாளேடு **30-4-2022**

**ONLINE**

**திருச்சி கல்லூரியில் ஜோஸ்டெல் மதிப்புக்கூட்டு இணைய வழி மேலாண்மை பாடத்திட்டங்கள் துவக்கம்**



திருச்சி, ஏப்.29- திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் மதிப்பீட்டு குழு முயற்சியில் தமிழகத்தில் உள்ள கலை அறிவியல் கல்லூரிகளில் முதன்முறையாக முதுகலை மாணவர்களுக்கான இணையவழியில் தாங்களாகவே கற்பதற்கு ஏதுவாக ஜோஸ் டெல் என்கிற கற்றல் மேலாண்மை தளத்தை கல்லூரியின் உள்ள பேராசிரியர்கள் முனைவர் ஜீடு நிர்மல், முனைவர் சேவியர்பிரதீப்சிங், முனைவர் ஜெரால்ட் மற்றும் முனைவர் கேப்ரியல்ரிச்சர்ட் ராய் ஆகியோர் தளத்தை உருவாக்கி உள்ளனர். இந்த தளத்தை மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்லூரி முதல்வர் அருட்தந்தை முனைவர் ஆரோக்கியசாமி சேவியர் இன்று செயல்பாட்டுக்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு பயிற்சி மையத்தின் இயக்குனர் முனைவர் செந்தில்நாதன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். முன்னதாக செய்திகளுக்கு பேட்டி அளித்த கல்லூரி முதல்வர் அருள்தந்தை ஆரோக்கியசாமி சேவியர் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் முயற்சியால் இந்த ஜோஸ்டெல் என்கிற கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையில் மாணவர்களும் வேலைவாய்ப்பு திறனை வளர்ப்பதற்கு உதவும் வகையில் பாடத் திட்டங்களை தேர்வு செய்து அந்தப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர்கள் பாடங்களுக்கான காணொளிகள் மற்றும் தகவல்கள் உருவாக்கி இந்த கற்றல் மேலாண்மை தளத்தில் உள்ளீடு செய்து உள்ளனர். மாணவர்கள் கற்றலை உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு பாடத்திற்கும் இணைய வழி நடத்தப்படும். இந்தக் கற்றல் மேலாண்மை தளத்தில் முதல் கட்டமாக கல்லூரியின் அனைத்து முதுகலை மாணவர்கள் இணைந்து கற்கும் விதத்தில் மொத்தம் 20 சுய கற்றல் பாடங்களும் மற்றும் மதிப்பு கூட்டு பாடங்களும் தயாரிக்கப்பட்டு தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார். மேலும் கல்வித்துறையில் உலகளாவிய பல தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களும் உலக தரத்திற்கு படங்களை தங்குதடையின்றி விரும்பும் நேரத்தில் இருக்கும் இடத்தில் இருந்து கற்றலை தொடர இந்த மேலாண்மை தளம் உதவுகிறது என தெரிவித்தார். இந்நிகழ்வுகளில் கல்லூரி அதிபர் முனிவர் அருட்தந்தை லியோனார்ட் பெர்னாட்ஷா, செயலாளர் முனைவர் அருட்தந்தை பீட்டர், அக தர மதிப்பீட்டு குழு தலைவர் முனைவர் ரோஸ் வெனிஸ் இடைத் தலைவர் குர்ஷித் பேகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**To read online scan the QR code**

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## NEWS EXTRACTS FROM PRESS MEDIA

KRISHI JAGRAN ONLINE

30-4-2022

To read online scan the QR code



# செயின்ட் ஜோசப் கல்லூரியில் இ-லெர்னிங் போர்ட்டல் அறிமுகம்!

Poonguzhali R Updated on 30 April, 2022 2:02 PM IST



செயின்ட் ஜோசப் கல்லூரி (SJC), இந்தியாவில் தமிழ்நாடு, திருச்சிராப்பள்ளி, 1844 இல் சொசைட்டி ஆஃப் ஜீசஸ் (Jesuits) மூலம் நிறுவப்பட்டது மற்றும் இது இந்தியாவின் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இது 1869 இல் மெட்ராஸ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. ஆனால், தற்போது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முதல் தரக் கல்லூரியாக இணைக்கப்பட்டுள்ளது.

செயின்ட் ஜோசப் கல்லூரி 1945 ஆம் ஆண்டு தனது நூற்றாண்டு விழாவையும் 1995 ஆம் ஆண்டு செக்விசென்டனரியையும் கொண்டாடியது. 2014 ஆம் ஆண்டில் தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சில் (NAAC) வழங்கிய ஐந்து நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. 2004 ஆம் ஆண்டில் UGC யால் சிறந்து விளங்கும் கல்லூரியாக (CPE) இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதோடு, 2012 இல் NAAC ஆல் A கிரேடு அங்கீகாரம் பெற்றது. இது 2016 இல் இந்தியாவில் உள்ள 12 கல்லூரிகளில் ஒன்றாக பாரம்பரியக் கல்லூரி அந்தஸ்தைப் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஜோசஃப் கல்லூரியில் மேம்படுத்தப்பட்ட, செயின்ட் ஜோசப் கல்லூரி JosTEL (Joseph's Technology enhanched Learning) என்ற உள்-கற்றல் மேலாண்மை அமைப்பை (LMS போர்டல்) அறிமுகப்படுத்தியுள்ளது.

அளித்துள்ளது.மாணவர்கள் தொழில்நுட்ப ரீதியாக பயிற்சி பெற்றனர் போர்ட்டலை முழுமையாகப் பயன்படுத்துங்கள்.தொடர்புடைய பாடநெறிக்கான பாடநெறி ஆசிரியர்கள் இணையதளத்தில் மாணவர்கள் தங்கள் சந்தேகங்களைத் தெளிவுபடுத்த உதவுவார்கள். போர்டலில் தொடங்கப்பட்ட மொத்த படிப்புகளின் எண்ணிக்கை 30 ஆகும், அவற்றில் 20 சுயமாகத் தொடங்கப்பட்டவை மேலும் 10 மதிப்பு சேர்க்கப்பட்டது. அல்லாவில், வீடியோக்கள், உரைப் பொருட்கள், விளக்கக்காட்சிகள் என 500 மின்-உள்ளடக்கங்கள் மற்றும் 150 மதிப்பீடுகள் MCOகள் மற்றும் பணிகள் வடிவில் போர்ட்டலில் பதிவேற்றப்பட்டன.

A கல்லூரியில் உள்ள அனைத்து முதுகலை மாணவர்களும் அந்தந்த பாடப்பிரிவுகளைப் பெறுவதற்கு போர்ட்டலில் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறினார்.

டிஜிட்டல் கற்றலின் ஒத்திசைவற்ற முறையில் மாணவர்களின் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில், அடுத்த கல்வியாண்டில் அனைத்து யுஜி மாணவர்களுக்கும் சுய படிப்புகளைத் தொடங்க கல்லூரி திட்டமிட்டுள்ளது என்பது கவனிக்க வேண்டிய ஒரு செய்தியாக உள்ளது.

இந்நிகழ்ச்சியில், பாரதிதாசன் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு மைய இயக்குனர் டாக்டர் செந்தில் நாதன், கல்லூரி தாளாளர் ரெவ் டாக்டர் எஸ் லியோனார்ட், செயலாளர் ரெ டாக்டர் எஸ் பீட்டர், துணை முதல்வர் டாக்டர் வி அலெக்ஸ் ரமணி ஆகியோர் பங்கேற்றனர். மேலும், ரோஸ் வெனிஸ், IQAC மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களின் டீன் குஷித் பேகம், வி ஜூட் நிர்மல், சேவியர் பிரதீப் சிங், விமல் ஜெரால்ட், ஜோஸ்டெல் போர்ட்டலை வடிவமைத்து உருவாக்கிய ஜார்ஜ் ரிச்சர்ட் கேபீரியல் ராய் ஆகியோரும் உடனிருந்து கலந்து கொண்டனர்.

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## NEWS EXTRACTS FROM PRESS MEDIA

அங்குசம் மக்களுக்கான செய்தி செய்தி

**ONLINE 29-4-2022**





உள்ளூர் செய்திகள்

# பாடத்தை முழுமையாக இணைய வழியிலே கற்கும் வழிமுறை திருச்சி தூய வளனார் கல்லூரியில் தொடக்கம் !

By JDR — On Apr 28, 2022

தமிழகத்தில் உள்ள கலை அறிவியல் கல்லூரிகளில் முதன்முறையாக அனைத்து முதுகலை மாணாக்கர்களும் தங்கள் படிப்பின் ஒரு பாடத்தை முற்றிலும் இணையவழியில் கற்பதற்கு ஏதுவாக ஜோஸ்டெல் என்கிற கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

கல்லூரியின் அகத்தரமதிப்பீட்டுக் குழு முயற்சியில் உருவாக்கப்பட்ட இந்தக் கற்றல் மேலாண்மைத் தளத்தினை கல்லூரியின் முதல்வர் அருள்முனைவர் ஆரோக்கியசாமி சேவியர் மாணவர்களின் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

உயர்கல்வியில் கற்றல் மேலாண்மைத் தளத்தின் பங்கு குறித்து பாரதிதாசன் பல்கலைக்கழக மனித வள மேம்பாட்டுப் பயிற்சி மைய இயக்குநர் முனைவர் செந்தில்நாதன் சிறப்புரையாற்றினார். மாணவர்கள் தங்கள் பணி வாய்புத்திறன் வளர்பிற்கு உதவும் வகையில் ஒரு பாடத்தைத் தேர்வு செய்து கற்க அந்தப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற பேராசியரியர்கள் பாடங்களுக்கான காணொளிகள் மற்றும் தரவுகளை உருவாக்கி இத்தளத்தில் உள்ளீடு செய்துள்ளனர்.

மாணவர்களின் கற்றலை உறுதி செய்யும் விதத்தில் ஒவ்வோரு பாடத்திற்குப் பிறகும் இணையவழித் தேர்வுகள் நடத்தப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கற்றல் மேலாண்மைத் தளத்தில் முதல்கட்டமாகக் கல்லூரியின் அனைத்து முதுகலை மாணாக்கர்கள் இணைந்து கற்கும் விதத்தில் 20 சுய கற்றல் பாடங்களும், 10 மதிப்புக் கூட்டுப்பாடங்களும் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

பாடத்திற்கான காணொளிகள், தரவுகள் மற்றும் தேர்வுகளைத் தயார் செய்வதற்கானப் பயிற்சிகள் பேராசிரியர்களுக்கு பல கட்டங்களாக அளிக்கப்பட்டு அவர்களால் உருவாக்கப்பட்ட 500க்கும் மேற்பட்ட மின் பொருண்மை கள் தரவேற்றம் செய்யப்பட்டு மாணவர்கள் கற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கற்றல் மேலாண்மைத் தளத்தை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்த அவர்களுக்கும் போதிய தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றுக் காலத்திற்குப் பிறகு கல்வித்துறையில் உலகலாவிய பல தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது.

நம் மாணவர்களுக்கு உலகத்தரத்தில் பாடங்களைத் தங்கு தடையின்றித் தாங்கள் விரும்பும் நேரத்தில் இருக்கும் இடத்தில் இருந்தே கற்றலைத் தொடரவும், மாணாக்கர்கள் மத்தியில் சுயக் கற்றலை ஊக்குவிக்கவும் இந்த கற்றல் மேலாண்மைத் தளம் உதவுகிறது.

இந்தநிகழ்வில் கல்லூரிஅதிபர் அருள்முனைவர் லியோனார்டு பெர்னான்டோ செயலர் அருள்முனைவர் பீட்டர் துணை முதல்வர்கள்,
புல முதன்மையர்கள், துறைத்தலைவர்கள், அனைத்துத் துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

ஜோஸ்டெல் கற்றல் மேலாண்மைத் தளத்தை உருவாக்க தொழில்நுட்ப ஏற்பாடுகளை செய்திருந்த பேராசிரியர்கள் முனைவர் ஜூடு நிர்மல், முனைவர் சேவியர் பிரதீப் சிங், முனைவர் விமல் ஜெரால்டு மற்றும் முனைவர் கேப்ரியேல் ரிச்சர்டு ராய் ஆகியோர் விழாவில் பாராட்டப் பெற்றனர்.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் அகதரமதிப்பீட்டுக் குழு புல முதன்மையர் முனைவார் ரோஸ் வெனிஸ் மற்றும் கூடுதல் புல முதன்மையர் முனைவர் குர்சித் பேகம் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

**To read online scan the QR code**

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## NEWS EXTRACTS FROM PRESS MEDIA




**ONLINE**

**29-4-2022**

**To read online scan the QR code**

# மாணவர்கள் இணையவழியில் தாங்களாகவே கற்பதற்கு ஏதுவாக ஜோஸ்டெல் (JOS TEL) மூலம் பாடத்திட்டங்கள்- ஜோசப் கல்லூரி

By **admin** - April 29, 2022



திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் உள் தரமதிப்பீட்டுக் குழு முயற்சியில் தமிழகத்தில் உள்ள கலை அறிவியல் கல்லூரிகளில் முதன்முறையாக, இக்கல்லூரியின் அனைத்து முதுகலை மாணாக்கர்களும் தங்கள் பாடத்தின் ஒரு பாடத்தினை முற்றிலும் இணையவழியில் தாங்களாகவே கற்பதற்கு ஏதுவாக ஜோஸ்டெல் (JosTEL) என்கிற கற்றல் மேலாண்மை தளம் (LMS Portal) உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த JosTEL கற்றல் மேலாண்மைத் தளத்தினை மாணவர்களின் பயன்பாட்டிற்காக 28-4-2022 அன்று கல்லூரியின் முதல்வர் அருள் முனைவர். ஆரோக்கியசாமி சேவியர் அவர்களால் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

மேலும் உயர்கல்வியில் கற்றல் மேலாண்மைத் தளத்தின் பங்கு குறித்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மனித வள மேம்பாட்டுப் பயிற்சி மையத்தினுடைய இயக்குநர் முனைவர். செந்தில்நாதன் சிறப்புரையாற்றினார்.

செயின்ட் சோசப் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் முயற்சியால் இந்த JosTEL என்கிற கற்றல் மேலாண்மைத்தளம் உருவாக்கப்பட்டடுள்ளது. ஒவ்வொரு துறையிலும் மாணாக்கர்களுக்கு வேலை வாய்புத்திறன் வளர்பிற்கு உதவும் வகையில் ஒரு பாடத்தை தேர்வு செய்து அந்தப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற பேராசியரியர்கள் பாடங்களுக்கான காணொளிகள் மற்றும் தரவுகளை உருவாக்கி இந்த கற்றல் மேலாண்மைத் தளத்தில் உள்ளீடு செய்துள்ளார்கள்.

மாணாக்கர்களின் கற்றலை உறுதிசெய்யும் விதத்தில் ஒவ்வோரு பாடத்திற்குப் பிறகும் இணையவழித் தேர்வுகள் நடத்தப்படும். இந்த கற்றல் மேலாண்மைத் தளத்தில் முதல்கட்டமாக கல்லூரியின் அனைத்து முதுகலை மாணாக்கர்கள் இணைந்து கற்கும் விதத்தில் மொத்தம் 20 சுயகற்றல் பாடங்களும் மற்றும் 10 மதிப்புக்கூட்டுப்பாடங்களும் தயாரிக்கப்பட்டு தரவேற்றம் செய்யப்ட்டுள்ளது.

பேராசிரியர்களுக்கு பாடத்திற்கான கானொளிகள், தரவுகள், தேர்வுகள் தயார் செய்வதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு தாங்களாகவே 500க்கும் மேற்பட்ட காணொளிகளும் தரவுகளும் உள்ளீடு செய்யப்பட்டு மாணாக்கர்கள் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கற்றல் மேலாண்மைத் தளத்தை மாணாக்கர்கள் முழுமையாகப் பயன்படுத்த அவர்களுக்கும் போதிய தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக்காலத்திற்குப் பிறகு கல்வித்துறையில் உலகலாவிய பல தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. இக்கல்லூரி மாணாக்கர்களுக்கு உலகத்தரத்தில் பாடங்களைத் தங்கு தடையின் தாங்கள் விரும்பும் நேரத்தில் இருக்கும் இடத்தில் இருந்தே கற்றலைத் தொடர இந்த கற்றல் மேலாண்மைத் தளம் உதவுகிறது. மேலும் மாணாக்கர்கள் மத்தியில் சுய கற்றலை ஊக்குவித்து கல்வியில் சிறந்து விளங்க உதவுகிறது.

இந்தநிகழ்வில் கல்லூரியின் நிர்வாகிகள் அதிபர் அருள்முனைவர் லியோனார்டு பெர்னான்டோ, செயலர் அருள்முனைவர் பீட்டர், துணை முதல்வர்கள், புலத்தலைவர்கள், துறைத்தலைவர்கள், அனைத்துத்துறையின் பேராசிரியர்கள் மற்றம் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்விற்கான ஏற்பாட்டினை கல்லூரியின் அகதரமதிப்பீட்டுக் குழுத்தலைவர் முனைவர் ரோஸ் வெனிஸ் மற்றும் இணைத்தலைவர் குர்சித் பேகம் செய்திருந்தார்கள்.

பேராசிரியர்கள் முனைவர் ஜீடு நிர்மால், முனைவர் சேவியர் பிரதீப் சிங், முனைவர் விமல்

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## NEWS EXTRACTS FROM PRESS MEDIA

தமிழ் முழக்கம்
உண்மையை பறைச்சாற்றுவோம்

**ONLINE**

**30-4-2022**

திருச்சி

# திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் "ஜோஸ் டெல்" என்கின்ற கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கம்.

By JB

APR 29, 2022




திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் உள் தர மதிப்பீட்டுக் குழு முயற்சியில் தமிழகத்திலுள்ள கலை அறிவியல் கல்லூரிகளில் முதன்முறையாக அக்கல்லூரியின் அனைத்து முதுகலை மாணாக்கர்களும் தங்கள் பாடத்தினை இணையவழியில் தாங்களாகவே கற்பதற்கு ஏதுவாக ஜோஸ் டெல் என்கிற கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஜோஸ் டெல் கற்றல் மேலாண்மை தளத்தினை மாணவர்களின் பயன்பாட்டிற்கு இன்று கல்லூரியின் முதல்வர் ஆரோக்கியசாமி சேவியர் துவங்கி வைத்து செயல்பாட்டிற்கு கொண்டு வந்தார். மேலும் உயர்கல்வியில் கற்றல் மேலாண்மை தளத்தின் பங்கு குறித்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு பயிற்சி மையத்தின் இயக்குனர் செந்தில்நாதன் சிறப்புரையாற்றினார்.



இந்நிகழ்வில் கல்லூரியின் நிர்வாகிகள் அதிபர் லியோனார்ட் பெர்னான்டோ, செயலர் பீட்டர், துணை முதல்வர்கள் புலத்தலைவர்கள், துறை தலைவர்கள் , அனைத்து துறையின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர். இன் நிகழ்விற்கான ஏற்பாட்டினை கல்லூரியின் அக தர மதிப்பீட்டுக் குழு தலைவர் ரோஸ் வெனிஸ் மற்றும் இணை தலைவர் குர்ஷித் பேகம் ஆகியோர் செய்திருந்தனர்.

**To read online scan the QR code**

திருச்சி விஷன்

**ONLINE 29-4-2022**

# திருச்சி ஜோசப் கல்லூரியில் மாணவர்களின் இணையவழி கல்விக்காக கற்றல் மேலாண்மை தளம்

Apr 29, 2022 - 12:50

0 165

Facebook Twitter




திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் உடன் தரமதிப்பீட்டுக் குழு முயற்சியில் தமிழகத்தில் உள்ள கலை அறிவியல் கல்லூரிகளில் முதன்முறையாக, எம் கல்லூரியின் அனைத்து முதுகலை மாணாக்கர்களும் தங்கள் பாடத்தின் ஒரு பாடத்தினை முற்றிலும் இணையவழியில் தாங்களாகவே கற்பதற்கு ஏதுவாக ஜோஸ்டெல் (JosTEL) என்கிற கற்றல் மேலாண்மை தளம் (LMS Portal) உருவாக்கப்பட்டிருக்கினறது, இந்த JosTEL கற்றல் மேலாண்மைத் தளத்தினை மாணவர்களின் பயன்பாட்டிற்காக 28-4-2022 அன்று காலை 11.30 மணி அளவில் கல்லூரியின் முதல்வர் அருள்முனைவர். ஆரோக்கியசாமி சேவியர் சே.ச.. அவர்களால் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. மேலும் உயர்கல்வியில் கற்றல் மேலாண்மைத் தளத்தின் பங்கு குறித்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மனித வள மேம்பாட்டுப் பயிற்சி மையத்தினுடைய இயக்குநர் முனைவர், செந்தில்நாதன் சிறப்புரையாற்றினார்.

செயின்ட் சோசப் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் முயற்சியால் இந்த JosTEI என்கிற கற்றல் மேலாண்மைத்தளம் உருவாக்கப்பட்டடுள்ளது. ஒவ்வொரு துறையிலும் மாணாக்கர்களுக்கு வேலை வாய்புத்திறன் வளப்பிற்கு உதவும் வகையில் ஒரு பாடத்தை தேர்வு செய்து அந்தப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற பேராசியரியர்கள் பாடங்களுக்கான காணொளிகள் மற்றும் தரவுகளை உருவாக்கி இந்த கற்றல் மேலாண்மைத் தளத்தில் உள்ளீடு செய்துள்ளார்கள். மாணாக்கர்களின் கற்றலை உறுதிசெய்யும் விதத்தில் ஒய்வோரு பாடத்திற்குப் பிறகும் இணையவழித் தேர்வுகள் நடத்தப்படும். இந்த கற்றல் மேலாண்மைத் தளத்தில் முதல்கட்டமாக கல்லூரியின் அனைந்து முதுகலை மாணாக்கர்கள் இணைந்து கற்கும் விதத்தில் மொத்தம் 20 சுயகற்றல் பாடங்களும் மற்றும் 10 மதிப்புக்கூட்டுப்பாடங்களும் தயாரிக்கப்பட்டு நரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பேராசிரியர்களுக்கு பாடத்திற்கான கானொளிகள், தரவுகள், தேர்வுகள் தயார் செய்வதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு தாங்களாகவே 500க்கும் மேற்பட்ட காணொளிகளும் தரவுகளும் உள்ளீடு செய்யப்பட்டு மானாக்கர்கள் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கற்றல் மேலாண்மைத் தளத்தை மாணாக்கர்கள் 'முழுமையாகப் பயன்படுத்த அவர்களுக்கும் போதிய தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்காலத்திற்குப் பிறகு கல்வித்துறையில் உலகலாவிய பல தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது.

**To read online scan the QR code**

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## VISUAL MEDIA EXTRACTS

**29-4-2022**




#NTV #NTVTRICHY #TRICHYNTV

திருச்சி St Joseph கல்லூரி மாணவர்களுக்கு Jostel கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கப்பட்டுள்ளது !28042022

**To watch scan the QR code**

# திருச்சி: ஜோஸ்டெல் என்ற புதிய APP: இணையவழியில் கற்க துவக்கம்!

Published : April 29, 2022, 04:15




திருச்சி: ஜோஸ்டெல் என்ற புதிய APP: இணையவழியில் கற்க துவக்கம்!

Tags: tiruchirappalli, திருச்சி, செயலி, துவக்கம், கல்லூரி, மாணவர்கள், trichy, college, students, online, app

**To watch scan the QR code**

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## VISUAL MEDIA EXTRACTS

### 29-4-2022




#Jostel

# channel7India # திருச்சி கல்லூரியில் ஜோஸ்டெல் மதிப்புக்கூட்டு இணைய வழி மேலாண்மை பாடம் திட்டங்கள் #

To watch

scan the QR code




To watch

scan the QR code

# LAUNCH OF JosTEL LMS - 28.4.2022

## VISUAL MEDIA EXTRACTS

## 29-4-2022




To watch

scan the QR code




To watch

scan the QR code

redtamiltv · Follow

Trichy Reporter




திருச்சி: செயின்ட் ஜோசப் கல்லூரியில் ஜோஸ் டெல் என்கின்ற கற்றல் மேலாண்மை தளம் உருவாக்கம்

2.4k views | Tiruchirappalli, Tiruchirappalli | Apr 28, 2022

To watch

scan the QR code